# செந்தமிழ்

தொகுதி: 92 பிப்ரவரி 1998 பகுதி: 2

திங்கள் இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பொறுப்பாசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்டி., எம்.எட்.,

# செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர் **தமிழண்ணல்**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் **செ. கந்தசாமி**
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் **அ. தட்சிணாமூர்த்தி**
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் **பழநி. அரங்கசாமி, தஞ்சாவூர்**

பேரறிஞர் **மரா.போ. குருசாமி**
செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்.

பேரறிஞர் **ச. மெய்யப்பன்**
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பேரறிஞர் **சி. கதிர் மகாதேவன்**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் **கு. துரைராசு**
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் **அ.அ. மணவாளன்**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

பெரும்புலவர் **இரா. இளங்குமரன்**
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.

பேராசிரியர் **ந. பொன்னப்பன்**
மதுரைக் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் **திருமதி. பத்மா சீனிவாசன்**
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேரறிஞர் **ந. மாணிக்கம்**
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் **திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்**
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பேரறிஞர் **எஸ்.எம். கமால்**
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்.

பேரறிஞர் **ஈ.கே. இராமசாமி**
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

பேராசிரியர் **சே. அரிராமநாதன்**
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ: 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


ஆசிரியர் *மா. தனுக்கோடிபாண்டியன்* பி.ஏ., பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பொறுப்பாசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

# பொருளடக்கம்


1. **திருப்பாவையில் பக்தி நெறி** 39
*பேரறிஞர் பழ. முத்துவீரப்பன்*

2. **கம்பர் காட்டும் இலக்கண வளம்** 44
*புலவரி மா. சின்னு*

3. **கம்பர் வாழி -16** 50
*மொ. மருதமுத்து*

4. **தமிழ் ஆண்டு எது ?** 59
*திரு வ. வேம்பையன்*

5. **படிப்பினை அளிக்கும் பரமக்குடிக் கல்வெட்டு** 62
*பேரறிஞர் ஆர். கே. அழகேசன்*

6. **இயற்கை கருவூலங்கள்** 70
*பொறியாளர் க.சி. அகமுடைநம்பி*

7. **மகளிர் கூந்தல் - பண்பாட்டுச் சின்னம்** 75
*பேரறிஞர் மா. சுசீலா*

# திருப்பாவையில் பக்தி நெறி

- பேரறிஞர் பழ. முத்துவீரப்பன்

கோதை நாச்சியார் பாடிய குறிக்கோள் இலக்கியம் திருப்பாவை ஆகும். இந்நூல் உலகியல் நோன்பை ஆதாரமாகக் கொண்டு ஓங்கி உலகளந்த உத்தமனின் திருவடிகளை அடைவதற்கு வழிகாட்டுகிறது. கோதை தமிழ்,

***பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும்***
***வேதம் அனைத்துக்கும் வித்தாகும்.***

என வேதபிரான் பட்டர் கூறுவது புகழுரை அன்று; பொருளுரை.

சங்க காலந் தொட்டு தமிழ்ப்பெண்கள் இயற்றி வரும். நோன்பு தைநீராடல் ஆகும். மழை வளம் பெற்று நாடு சிறக்கவும், நல்ல கணவரைப் பெற்றுத் தங்கள் வீடு சிறக்கவும் வேண்டிப் பெண்கள் மேற்கொண்ட நோன்பு இது. நற்றிணை, கலித்தொகை அகநானூறு முதலான சங்க இலக்கியங்களில் இந்நோன்பு குறித்த செய்திகள் உள்ளன. மார்கழித் திங்களில் மதி நிறைந்த திருவாதிரையில், ஆற்றங்கரையோரம் அந்தணர்கள் தீவளர்க்க, முதிய பார்ப்பனிகள் சடங்குகளைக் கற்பிக்க, தாய்மார் அருகிருக்க, சிறு பெண்கள் முன்னைப் பிறவிகளில் செய்த தவப்பயனால் இந்நீராட்டத்தை நிகழ்த்துவர் எனச் சங்கப் பின்னிலக்கியமாகிய பரிபாடல் சாற்றுகிறது. இந்நீராடல் மார்கழி மாதப் பிற்பகுதியில் நிகழ்ந்ததால் மார்கழி நீராட்டு எனவும், தாய் அருகிருக்க ஆடியதால் அம்பாவாடல் எனவும் வழங்கப்பட்டது என்பர் மு. இராகவ ஐயங்கார். அம்பாவையைப் பூசித்து நீராடும் நோன்பு அம்பாவை ஆடல் எனப்பட்டு அம்பாபாடல் என மாறியிருக்க வேண்டும் என்பர் சிலர். பாகவதத்தில் கண்ணன் கோபியர் துகில் கவர்ந்த வரலாறு கூறும் பகுதியில் கார்த்தியாயினி நோன்பு என்பது குறிப்பிடப்படுகிறது. கன்னிப் பெண்கள் கண்ணனை நாயகனாக அடைய ஈரமணலில் கார்த்தியாயினி தேவியின் உருவம் செய்து பூசித்த வரலாற்றை இப்பகுதி விளக்குகிறது.

உலக இன்பம் கருதிப் பாவையர் கொண்டாடிய தைந் நீராட்டு விழாவை முன் மாதிரியாகக் கொண்டும் கோபியர்கள் கண்ணனை நாயகனாக அடையக் கார்த்தியாயினி தேவியைப் பூசித்த செயல்களை விவரிக்கும் பாகவதக் கருத்தை அடியொற்றியும் ஆண்டாள் மேற் கொண்ட பாவனையைச் சித்திரிப்பதே திருப்பாவை.

தத்துவம், இதம், புருடார்த்தம் என்னும் மூன்றையும் விளக்குவது வைணவ நெறியாகும். எது பொருள் என்ற வினாவை எழுப்பி நாராயணனே பொருள் என விளக்குவது தத்துவம் எனப்படும். எது நெறி என்னும் வினாவை எழுப்பிக் கருமம், ஞானம், பக்தி, பிரபத்தி, ஆசாரிய அபிமானம் என்னும் ஐவகைகளை விளக்குவது இதம் எனப்படும். எது பயன் என்றும் வினாவை எழுப்பி, இறைவனுக்குச் செய்யும் தொண்டு, அடியார்க்குச் செய்யும் தொண்டு என்னும் இரண்டையும் பகவத் கைங்கர்யமி பாகவத கைங்கரியம் எனப் பிரித்து விளக்குவது 'புருடார்த்தம்' எனப்படும். திருப்பாவை இம்மூன்று தத்துவங்களையும் தெளிவாக விளக்குகிறது முதல் ஐந்து பாசுரங்களில் தத்துவமும் அடுத்த 15 பாசுரங்களில் இதமும் 21 முதல் 25 வரை இறை வாழ்த்தும் இறுதி 5 பாசுரங்களில் பெறும் பயனும் விளக்கப்பட்டுள்ளன.

பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அரிச்சை என்பன இறைவனின் ஐந்து சொரூபங்கள் ஆகும். பரம் என்பது சிறீ வைகுண்டத்தில் உள்ள மேலான வடிவம். வியூகம் என்பது திருப்பாற் கடலில் தேவர்கள் வழிபட வெளிப்பட்ட வடிவம். விபவம் என்பது தீயோரை அழித்து நல்லோரைப் பேணத் தோன்றி வந்த வடிவம். அந்தர்யாமி என்பது இயங்குதிணை, நிலத்திணைப் பொருள்களில் ஊடுருவி நிற்கும் உள்ளுறை வடிவம். அரிச்சை என்பது திருக்கோயில்களில் வழிபடற்குரிய வடிவம். நாராயணன், பாற்கடலில் பையத்துயின்ற பரமன், ஓங்கி உலகளந்த உத்தமன், ஆழி மழைக் கண்ணன், வட மதுரை மைந்தன் என்னும் தொடர்களால் முதல் ஐந்து பாடல்களில் இறைவனின் ஐந்து சொரூபங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன என்பர்.

*பாவை என்பதற்குப் பதுமை, பெண், நோன்பு எனப் பலபொருள் உண்டு. ஆண்டாள் தாம் நோற்ற நோன்பிற்குப் பாவை என்று பெயர்சூட்டுகிறார். கிருஷ்ணாவதாரத்தில் கோபியர் பின்பற்றிய கண்ணன் காதலையே கோதையும் பின்பற்றுகிறார். தன்னைக் கோப கன்னிகையாகவும் தோழிமார்களைப் பிற கோபியராகவும் ஸ்ரீவில்லிபுத்தூரை ஆயர்பாடியாகவும் வடபத்திரசாயி சந்நிதானத்தை நந்த கோபாலன் இல்லமாகவும் அங்குள்ள பெருமானைக் கண்ணனாகவும் பாவித்துக் கொள்கிறாள். பாவனை என்பதற்குச் சிந்தனையின் முதிர்ச்சி என்பது பொருள். அழுந்திய எண்ணம், உள்ள ஒருமை, பயன் அளிக்கும் என்ற நம்பிக்கை, தொடர்ந்து பற்றும் உறுதி ஆகியன இருந்தால் தான் பாவனை வெற்றி தரும்.*

*திருப்பாவைப் பாசுரங்களில் மேலோட்டமான பொருள் என்றும் உள்ளுறைப் பொருள் என்றும் இருப்பதை உரைப் பேரரசர் பெரியவாச்சான் பிள்ளை நன்கு விளக்கியுள்ளார். இங்கு 'நீராடல்' என்பது புற நீராடலைக் குறிக்கவில்லை.*

*நீராடப் போதுவீர் என்ற அழைப்புடன் முதற்பாசுரம் தொடங்குகிறது. 'மார்கழி நீராட' என நாலாம் பாசுரம் வழி மொழிகிறது. ஆனால் முப்பதாம் பாசுரம் வரை தடாகம் என்பதே தட்டுப்படவில்லை. கண்ண பெருமானின் கல்யாண குணங்களாகிய தடாகத்தில் மூழ்கித் திளைப்பதே இங்குக் குறிக்கப்படும் நீராடல் ஆகும். இப்பேற்றினைப் பெற தவம், யோகம், ஞானம் எதுவும் வேண்டியதில்லை. விருப்பம் ஒன்றே தேவையான தகுதி. வேறு எதுவும் தேவை இல்லை என்பது குறிப்பிடப்படுகிறது. பிராட்டி வாயிலாகவே பெருமானைப் பற்ற வேண்டும் என்ற வைணவ நெறிப்படி நப்பின்னைப் பிராட்டியிடம் 'நின் மணாளனைத் தந்து இப்போதே எம்மை நீராட்டுக' எனப் பின்னர் வேண்டுவதால் நீராடல் என்பதன் பொருள் அகநீராட்டே என்பது புலனாகிறது.*

*திருப்பாவையின் திரண்ட பொருள் என்ன? முப்பது பாசுரப் பொருளும் முதற்பாசுரத்தில் உள்ளது என்பர் அறிஞர். ஜீவான்மாக்கள் அடைய வேண்டிய குறியும் அதற்குரிய நெறியுமாக இருப்பவன் ஸ்ரீமந்நாராயணன். ஆன்மக் குறிக்கோள்*

கிருஷ்ணாநுபவம். அதற்குரிய தகுதி விருப்பம். அடைவதற்குரிய வழி அவன் அருள். பெற விரும்பும் பேறு கைங்கர்யத் தொண்டு. இவற்றைச் செறிவாக 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என முழங்குகிறது முதற்பாசுரம். இங்குப் 'பறை' என்பதன் உள்பொருள் பகவத் கைங்கரியம் ஆகும். இவற்றை நன்கு விரித்துக் கூறுகிறது 29ஆம் பாசுரம். கண்ணனின் பொற்றாமரை அடியே போற்றும் பொருளாம். குறிக்கோள் இதில் வெளிப்படுத்தப்படுகிறது. சின்னஞ்சிறு பெண்கள் சிற்றஞ் சிறுகாலையில் சேவிக்கிறார்கள் என்றால் விருப்பம் இல்லாமல் நடக்குமா? இதனால் ஆன்ம விழைவு புலப்படுத்தப்படுகிறது. மாடுகளை உண்ண வைத்துப் பின் உண்ணுபவர்கள் கோவலர்கள். ஆன்மாக்களை அனுபவிக்கச் செய்து அனுபவிப்பவன் கண்ணன். எனவே பெற்றம் மேய்க்கும் குலத்தில் பிறந்தவன் என்பதில் அவன் ஆன்மாக்களுக்கு அருள் புரிபவன் என்ற இயல்பு புகழப்படுகிறது. ஆன்மா பெறும் பயன் என்ன? கோவிந்தா, 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தன்னோடு உற்றோமே ஆவோம். உனக்கே நாம் ஆட்செய்வோம் எனப் புருஷார்த்தம் வேண்டப்படுகிறது. இவ்வாறு குறிக்கோள், விருப்பம், இறையருள், அடித் தொண்டு நான்கும் இங்கு விளக்கிக் கூறப்படுவதால் இதனை 'உயர்நிலைப்பாட்டு' எனப் போற்றுவர்.

குறியும் அவனே நெறியும் அவனே சரி. நாம் இதற்காக என்ன செய்யவேண்டும். சிலவற்றைச் செய்ய வேண்டும். சிலவற்றைத் தவிர்க்க வேண்டும். நாட்காலை நீராடுதல், பரமன் அடிபாடுதல், தகுதியுடையவர்கட்கும் ஏழைகட்கும் ஐயமிடுதல், துறவிகட்கும் பிரமச்சாரிகட்கும் பிச்சை அளித்தல், உய்யும் வழியை எண்ணுதல், உகந்து செய்தல் என்பன கொள்ள வேண்டியவை. நெய் உண்ணாதிருத்தல், பால் உண்ணாதிருத்தல், மையிடாதிருத்தல், மலர் சூடாதிருத்தல், செய்யாதன தவிர்த்தல், புறங்கூறுதல் ஆகியன தள்ள வேண்டியவை.

ஆன்ம நலத்துக்கு அடிப்படை மனத்தூய்மை அல்லவா? எனவே தூயோமாய் வந்து (5, 16) என ஒருமுறைக்கு இருமுறை கூறுகிறார் ஆண்டாள்.

*தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது*
*வாயினாற் பாடி மனத்தினால் சிந்திக்க (பா.5)*

எனப் படிநிலை வளர்ச்சி காட்டும் வகையில், மெய், மொழி, மன வழிபாட்டைப் பேசுகின்றார் அவர். மெய்வழிப்பாட்டில் தொடங்கி மொழி வழிபாட்டில் வளர்ந்தால்தானே மனவழிப்பாட்டில் நிலைக்க முடியும்? (ஆழ்வார்கள் கூறும் கருமம், ஞானம், பக்தி, பிரபத்தி, ஆசாரிய அபிமானம் என்னும் ஐந்தும் ஒன்றிலிருந்து ஒன்று கிளைப்பன தாமே!)

இவ்வாறு மனம் மொழி மெய்களால் வழிபடும் ஆன்மா இறை அனுபவத்தைத் தனித்துப் பெறுவது என்பது தன்னலமாகும். அடியார் பலரோடும் கூடியே இறை அனுபவத்தை அனுபவிக்க வேண்டும். சொல்ல முடியாத சுகத்தைப் பங்கு போடுவதே பாகவதப் பெருநெறி. தோழியரை எழுப்புவது என்பது இதற்காகத்தான். 6ஆம் பாசுரம் முதல் 15ஆம் பாசுரம் வரை எழுப்பப்படும் தோழியர் சொல்லாலும் செயலாலும் பண்பாலும் பலநிலையினர். கிருஷ்ண பக்தியால் தொடக்க நிலையாளர் சிலர், தோய்ந்து உலகம் மறைந்தவர் சிலர், தொடர்ந்து கடந்தவர் சிலர்; என்னைப் பெற அவன் அல்லவா நோன்பு நோற்க வேண்டும் எனத் தெம்போடிருப்பவரும் உண்டு. இவர்கள் நிலைகளை அடையாளம் காட்டும் வகையில் பிள்ளாய் (6), நாயகப் பெண் பிள்ளாய் (7) கோதுகலம் உடையபாவாய் (8) மாமன் மகள் (9) அருங்கலம் (10) கோவலர்தம் பொற்கொடி (11) நற்செல்வன் தங்காய் (12) பாவாய், போதரிக் கண்ணினாய் (13) நங்காய், நாணாதாய், நாவுடையாய் (14) எல்லே இளங்கிளியே, (15) என விளிப்பர் ஆண்டாள். 'போதரிக் கண்ணினாய் கள்ளம் தவிர்ந்து கலந்து, குள்ளங் குளிரக் குடைந்து நீராடுக' என 13ஆம் பாசுரம் இறை இன்பத்தைப் பொதுவாக அனுபவிக்க வேண்டும் என வெளிப்படையாகப் போதிக்கிறது. பொதுவாக உண்பதனைப் புக்கு நீ உண்டக்கால் என நாச்சியார் திருமொழியிலும் இதை நவின்றுள்ளார். ரசமான பொருளை எல்லோருடனும் சேர்ந்துதான் உண்ண வேண்டும். கிருஷ்ணனை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்களை இழக்கக் கூடாது என்பதே இவ்வாறு வலியுறுத்துவதற்குக் காரணம்!.

(தொடரும்)

# கம்பர் காட்டும் இலக்கண வளம்

- புலவர் மா. சின்னு

கம்பருக்கு இலக்கணம் தொல்காப்பியம். தொல்காப்பிய நெறி நின்று காப்பியம் இயற்றிய இக் கவிஞர் சில புதிய இலக்கண உத்திகளையும் கையாண்டுள்ளார். அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

தண்டியாசிரியர் தண்டியலங்காரம் என்னும் தம் இலக்கணத்தில் பெருங்காப்பியம் எவ்வாறு இருக்க வேண்டும் என விதிகள் வகுத்தார். அவற்றுள் ஒன்று, வருணனை. ஒரு காப்பியத்தில் மலை, கடல், நாடு, வளநகர், பருவம் பற்றி வருணனை செய்வதுடன், சூரிய உதயம், சந்திர உதயம் - மறைவு பற்றியும் வருணனை செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறார். அதனால், காப்பியப் புலவர்கள் சந்திர சூரிய வருணனைகளைத் தம் நூலில் சேர்த்தனர். தண்டியலங்காரத்திற்கு முன்னர்த் தோன்றிய சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களிலும் இவ்வருணனை உண்டு. கம்பரும் சந்திர-சூரிய வருணனை செய்கிறார். இவ்வருணனைகளைக் காரண காரியங்களுடன், காப்பியப் பாத்திரங்களின் செயல்பாடுகளுடன் இணைத்து வருணனை செய்து புதுநெறி காட்டுகிறார்; காலக் கணக்கிற்குப் பயன்படுத்துகிறார்.

சுந்தரகாண்டத்தில் ஊர்தேடு படலம்; பவள மலை மேலிருந்து இலங்கையின் மாட்சியைக் கண்ட அனுமன் வியக்கிறான். 'இலங்கை மாநகரின் பளிங்கு மாளிகைகளில், கற்பகச் சோலைகளில் தேறல் உண்டு ஆடுகின்ற, பாடுகின்ற களிக்கின்ற, மாந்தரையே காண்கிறேன்; கவல்கின்றார் ஒருவரையும் காணேன்' என்கிறான். அப்பொழுது, வெய்யோன் குடகடல் குளிப்பதனால் முன்னிருட்டு சூழ்கிறது. 'தீவினை என இருள் செறிந்தது எங்குமே' என்றும், 'சிவபெருமான் அந்தணர்க்கு இடையூறு செய்த யானையை உரித்த பெரிய

உரிவையால் (தோலால்) உலகுக்கு ஓர் உறை இட்டனன் எனும்படி இருள் செறிந்தது' என்றும் வருணிக்கிறார். சிறிது நேரத்தில் அம்முன்னிருள் விலகுகிறது.

*தீண்டருந் தீவினை தீக்கத் தீந்துபோய்*
*மாண்டற உலர்ந்தது மாருதிப் பெயர்*
*ஆண்டகை மாரிவந்து அளிக்க ஆயிடை*
*ஈண்டறம் முளைத்ததென முளைத்தது இந்துவே.*

*(ஊர்தேடு: 50)*

அறம் முளைத்தது போல முழுமதி முளைத்தது என்றார்.

இவ் ஊர்தேடு படலத்தில் சந்திரன் உதித்ததைக் கூறி, காட்சிப் படலம், உருக்காட்டுப் படலம், சூடாமணிப் படலம் ஆகிய படலங்களில் அன்றைய இரவில் அனுமன் நிகழ்த்திய செயல்களைக் கூறி, பொழிலிறுத்த படலத்தில் சூரியன் தோன்றுதலைக் கூறுகிறார். அங்கே (ஊர்தேடு படலத்தில்) மறைந்த சூரியனைக் காட்டினார்; இங்கே உதிக்கும் கதிரவனை,

*உறுசுடர்ச் சூடை காசுக்கு*
*அரசினை உயிர்ப் பானுக்கு*
*அறிகுறி யாக விட்டாள்*
*ஆதலின் வறியள் அந்தோ!*
*செறிகுழல் சீதைக்கு அன்றோர்*
*சிகாமணி தெரிந்து வாங்கி*
*எறிகடல் ஈவது அன்ன*
*எழுந்தனன் இரவி என்பான்*

*(பொழிலிறுத்த - 45)*

என்று பாடுகிறார்.

சந்திர சூரிய தோற்றத்திற்கு இடைப்பட்ட பன்னிரண்டு மணி நேரத்தில் (இரவில்) அனுமன், இலங்காதேவியை வென்று நகரினுள் புகுந்து கும்பகருணன், வீடணன், மண்டோதரி முதலியோர் உறக்கங் கண்டு, அசோக வனத்தினுள் சீதையைக் கண்டு, அவள் இராவணனுடன் உரையாடி வெறுத்துப் பேசுவதும் கேட்டு மகிழ்ந்து, தன் விஞ்சையால் அரக்கியரை

உறங்க வைத்துத் தொண்டைவாய் மயிலினை (சீதையை)த் தொழுது, தான் வந்த வரலாற்றைக் கூறி இராமன் தந்த ஆழி காட்டி அவளிடமிருந்து சூடாமணி பெற்று, அசோக வனத்தை அழித்த நிகழ்ச்சிகளைக் கூறுகிறார் கம்பர்.

பன்னிரண்டு மணி நேரத்தில் அனுமன் செய்த பல செயல்களை அடுக்கிக் கூறி, ஆற்றலை வெளிப்படுத்த வருணனை இலக்கணத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார் இவ்விலக்கணப் புலவர்.

அங்கே "அறம் முளைத்தது என முளைத்தது இந்து" என்று பாடியதில் உவமையணி கண்டோம்; இங்கே, தற்குறிப்பேற்ற அணி காண்கிறோம். இயல்பான நிகழ்ச்சியில் கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

'சீதை தன்னிடம் இருந்த ஒரே செல்வமாகிய சூடாமணியை அனுமனிடம் கொடுத்து விட்டாள்; இவள் வறுமையுற்றதைப் பொறுத்துக் கொள்ளாத கடல் தந்த மணிதான் உதயமாகும் கதிரவன்' என்று காப்பியப் பாத்திரத்துடன் தொடர்பு படுத்திக் கூறிய கம்பர் திறனே திறன்.

அணிகளுள் முதன்மையானது உவமை. இவ்வுவமை கூறுவதில் ஒரு புதுமையைத் தம் காப்பியத்தில் படைத்துப் பிற கவிஞர்களுக்கு வழிகாட்டிய பெருமை கம்பருக்கு உண்டு.

ஐயன் மேனி எப்படித்து? எனச் சீதை வினவினாள். அனுமன் இராமனின் வடிவழகை விளக்கிப் பேசுகிறான்:

*புல்லல் ஏற்ற திருமகளும்*
*பூவும் பொருந்தப் புவியேழும்*
*எல்லை ஏற்ற நெடுஞ்செல்வம்*
*எதிர்ந்த ஞான்றும் அஃதென்றி*
*அல்லல் ஏற்ற காலத்தும்*
*அழியா நடையை இழிவான*
*மல்லல் ஏற்றின் உளதென்றால்*
*மத்த யானை வருந்தாதோ!*

திருமகளும் விரும்பும் செல்வத்தை ஏற்காது வெளியேறி, அல்லல்கள் பல அடைந்த காலத்திலும், இராமன் நடந்த நடை, ஒரு காளை செம்மாந்து நடந்தது போல இருந்தது எனக் கூறினால், உடனே வலிமையான இளங்களிறு, தன்னை இராமனுடைய நடைக்கு உவமையாகக் கூறவில்லையே என்று வருத்தப்படுமாம். (இழிவான மல்லல் ஏறுயானையை நோக்க வலிமை குறைந்த எருது) ஒன்றைச் சிறப்பிக்க, மற்றொன்று வருந்தும் என்று புதுமை தோன்றப் பாடினார் கம்பர்.

தியாக பிரமம் இராமனின் அம்புகள் 'சரிகமபதநி என்ற ஏழிசை போல் செல்கின்றன' என்றார். இசைஞானியாகையால் அவர் இசையுடன் ஒப்பிட்டார். கம்பரோ இலக்கிய இலக்கணப் புலவர். அதனால்தான் இராவணன், இராமனுடைய பகழி ஆற்றலைப் பின்வருமாறு கூறினார்:

> ***நல்லியல் கவிஞர் நாவில்***
> ***பொருள்குறித் தமர்ந்த நாமச்***
> ***சொல்என செய்யுள் கொண்ட***
> ***தொடையென தொடையை நீக்கி***
> ***எல்லையில் சென்றும் தீரா***
> ***இசையென பழுது இலாத***
> ***பல்அலங் காரப் பண்பே***
> ***காகுத்தன் பகழி மாதோ!***
>
> ***(கும்பகர்ண - 22)***

'இலக்கணப் புலவர் நாவிலிருந்து வரும் பொருள் குறித்த சொற் பெருக்கம் போலத் தமிழ்ச் செய்யுட்களில் மலிந்து கிடக்கும் எதுகை மோனை முதலிய தொடைகளைப் போல, அத்தொடைகளுக்குள் புதைந்துள்ள குறைவற்ற இசையைப் போல, பழுதிலாத உவமை, உருவகம் போன்ற அலங்காரங்கள் என்று கூறும்படி இராமனிடமிருந்து அம்புகள் வந்தன கண்டேன்' என்று மாலியவானிடம் கூறினான். போர்க்கள நிகழ்ச்சிகளைக் கூறும்போதும் கவிதைகளில் தொடை, அலங்காரம் முதலிய இலக்கணக் கணைகளைத் தொடுக்கிறார்

கம்பர். இவை இவருடைய இலக்கண வளத்திற்குச் சான்று பகர்கின்றன.

கவிஞருக்குள் கவிஞராகத் திகழ்வோர் தம் நூல்களில் இறைச்சிப் பொருள் தருமாறு பாடல் இயற்றாமல் இரார். அனுமன், இராவணனை நோக்கி, 'வாலி தன் மகன் தூதன் வந்தனென் தமியேன்' என்றான். உடனே, இலங்கை வேந்தன் இகழ்ச்சி தோன்ற நகைத்து, 'வாலி சேய் விடுத்த தூத! வன்திறல் ஆய வாலி வலியன் கொல்; அரசின் வாழ்க்கை நன்று கொல்?' என்று கேட்டான். இராம தூதனும் நகைத்துக் கொண்டே,

*அஞ்சலை அரக்க! பார்விட்டு*
*அந்தரம் அடைந்தான் அன்றே*
*வெஞ்சின வாலி; மீளான்*
*வாலும்போய் விளிந்த தன்றே*
*அஞ்சன மேனி யான்தன்*
*அடுகணை ஒன்றால் மாழ்கித்*
*துஞ்சினன்; எங்கள் வேந்தன்*
*சூரியன் தோன்றல் என்றான்*

*(பிணிவீட்டுப்: 79)*

'அரக்க! அஞ்சற்க. நீ நினைத்து அஞ்சி நடுங்கும் வரபலம் பெற்ற வாலி இராமனுடைய ஒரே கணையால் விண்ணுலகை அடைந்து விட்டான்; உன்னைப் பிணித்த வாலியின் வாலும் போய் விட்டது; இனி, வாலி மீளான்; இப்போது எங்கள் கிட்கிந்தை வேந்தன் சூரிய குமாரனாகிய சுக்கிரீவன்' என்றான்.

'அரக்கனே! உன்னைத் தன் வாலில் பிணித்து விண்ணில் பறந்து நடுங்க வைத்த ஆற்றல்சால் அந்த வாலியை ஒருகணையால் கொன்ற வல்வில் வேந்தன் எங்கள் இராமன்; வாலியைக் கண்டு நீ நடுக்குற்றதைக் காட்டிலும் எங்கள் இராமனைக் கண்டு அஞ்சி பெரிதும் நடுங்க வேண்டிய தருணம் வந்துவிட்டது' என்ற குறிப்புப் பொருளைத் தருவதால் கம்பருடைய இப்பாடல் இறைச்சிக்கோர் எடுத்துக்காட்டு.

கம்பர் சொற்பொருள் பின்வரு நிலையணியில் ஒரு புதிய பிரிவை ஏற்படுத்தி, அதற்குப் பெயரிட வேண்டிய பொறுப்பை நம்மிடம் விட்டுச் சென்றுள்ளார். இராவணன் அணங்குறு படலத்தில் (83),

*கரனையும் மறந்தான் தங்கை*
*மூக்கினைக் கடிந்து நின்றான்*
*உரனையும் மறந்தான் உற்ற*
*பழியையும் மறந்தான் வெற்றி*
*அரனையும் கொண்ட காமன்*
*அம்பினால் முன்னைப் பெற்ற*
*வரனையும் மறந்தான் கேட்ட*
*மங்கையை மறந்தி லாதான்*

என்று பாடுகிறார். சொற்பொருள் பின்வரு நிலையணியின் இலக்கணம்: செய்யுளில் ஒரு சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவதாகும். இங்கே கம்பர் பாடலில் 'மறந்தான் என்ற சொல் நான்கு இடங்களில் வந்தது. நான்கும் உடன்பாட்டில் வந்தன. இறுதியடியின் இறுதிச் சீரை 'மறந்திலாதான்' என எதிர்மறை தந்து முடிக்கிறார். இஃது ஒரு புதுமை.

*****

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே

(புறம் - 188, பாண்டியன் அறிவுடை நம்பி)

# கம்பர் வாழி - 16

மொ. மருதமுத்து

கொங்கு வேளாளர்களின் திருமணங்களில் பாடப்பெறும் 'மங்கல வாழ்த்து' மற்றும் 'கம்பர் வாழி-16' ஆகிய பாடல்களைக் கம்பர் இயற்றியதாகக் கூறுவர். கம்பர் வாழி-16 என்ற பெயரில் சென்னை ஆசியவியல் நிறுவனத்தில் இருசுவடிகள் உள்ளன. இவற்றில் இருபது பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவ்விருபது பாடல்களும் குறிப்புரையுடன் இங்குத் தரப்படுகின்றன.

## பாடல் வந்த வரலாறு

*குலோத்துங்க சோழன் சோழ நாட்டையும் கொங்கு நாட்டையும் ஆட்சி செய்த காலத்தில் காவிரி நதி பெருகி வெள்ளங் கரை கடந்தது. இதனால் அந் நதியின் இருபாலும் உள்ள நிலம், ஊர் முதலியன அழிந்தன. அரசனும் அதிகாரிகளும் குடிமக்களும் கூடினார்கள். கரை கட்டியும் வெள்ளம் நிற்கவில்லை. கொங்கு வேளாளக் குடிமக்கள் அரசனிடம் சென்று தெய்வீகப் புலமை வாய்ந்த கம்பர் பாடினால் கரை அடைபட்டு வெள்ளம் நிற்கும் என்று கூறினார்கள். அரசனும் அதற்கிணங்கிக் குடிமக்களோடு கம்பரிடம் சென்று வேண்ட, கம்பரும்,

> ***"கன்னி யழிந்தனன் கங்கை திறம்பினள்***
> ***பொன்னி கரைகடந்து போயினள்என்று - இன்னீர்***
> ***உரைகிடக்க லாமோ உலகுடைய தாயே***
> ***கரைகடக்க லாகாது காண்"[2]***

---

* இரண்டாம் குலோத்துங்கன் என்பது சரித்திர ஆராய்ச்சியாளர் துணிவு.

1. சுவடிகள் பார்வை எண். 572, 573
2. தனிப்பாடல், கம்பர் பாடியது.

என்ற பாடலைப் பாடினாராம். உடனே நதிப்பெருக்கு அடங்கியது. பெருமகிழ்வுற்ற அரசனும் குடிமளும் இப் பேருபகாரத்திற்கு என்ன கைம்மாறு செய்யவல்லோம்; ஆயினும் தாங்கள் ஏது விரும்பினும் உதவத் தயாராக உள்ளோம் என்றார்கள்.

கம்பர் அதற்கு எப்பொழுதும் அரசனும் குடிகளும் எம்மை நினைக்கத் தக்கதாக இருக்க வேண்டும். ஆகவே குடிமக்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தும் கலியாண வரியை எமக்குத் தந்துதவினால் போதும் என்றார். உடனே சோழன் ஒரு சாசனம் எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தான். இதனைக் கீழ்வரும் பாடல் உணர்த்தி நிற்கின்றது.

*"கதுவி வருபொன்னி கரைகடவா வண்ணம்*
*பதுமமுகக் கம்பரவர் பாட - வதுவைவரி*
*மாடை யரைக்கழஞ்சு வன்கம்பர்க் கீந்தபரிசு*
*ஏடர் குலோத்துங்கன் எழுத்து."*[3]

மேலும் கம்பர் இந்த நிகழ்ச்சியானது என் வல்லமையால் நிகழ்ந்ததன்று, தெய்வத் தமிழால் நிகழ்ந்தது ஆதலின் இக்கலியாண வரியை அத்தமிழுக்கே உரிமையாக்குகிறேன் எனக் கூறி, மலினப்பட்டு வரும் கொங்கு நாட்டுத் தமிழ்ப் புலவர்களுக்குக் கொடுத்துப் புகழையும் பெருக்கத்தையும் அடையுமாறு விரும்புகிறேன் என்றார். அரசனும் குடிகளும் இப்பேருதவிக் குணத்தை வியந்து பாராட்டி மகிழ்ந்தனர். கம்பர் வாழிபாடி அப்புலவர்களிடம் கொடுத்துத் தலைமுறை தலைமுறையாகக் கொங்கு வேளாளரின் திருமணக் காலங்களில் வாழி கூறி வரிப்பணத்தைப் பெற்றுத் தமிழை வளர்த்து வாருங்களென்றனுப்பினார்.

மேலும், இச்செய்தியினைக் கொங்கு மண்டல சதகம் என்ற நூலில் வரும் பாடல்களால் அறியலாம்.

3. தனிப்பாடல்

*"கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள் கண்ணின்முனே*
*பொன்னி கரைகடந் தாளெனு நிந்தை புவியிலுளோர்*
*பன்னி யிகழா தமரெனக் கம்பரோர் பாச்சொலச்செய்*
*மன்னிய கங்கைக் குலத்தாரும் வாழ்கொங்கு மண்டலமே"[4]*

*"வளவ னெழுத்துப் படிக்கம்பர்க் கான வதுவைவரி*
*தெளியும் பழந்தமி ழைவாணர் கொள்ளச் செயுமுரிமை,*
*கொளவேற் றவர்தமைத் தேர்ந்தெடுக் குஞ்சபை கூடிவரு*
*வளமை மிகுதிருச் செங்கோடை யுங்கொங்கு மண்டலமே"[5]*

## புலவரைத் தேர்ந்தெடுத்தல்

திருச்செங்கோட்டில், மலை முதற்படி அருகிலுள்ள அழகிய விநாயகர் சந்நிதியில் படிகாரர்கள் சபை ஒன்று பன்னிரெண்டு ஆண்டுக்கொருமுறைக் கூடி, கம்பர் உரிமையில் பெறக் கூடியவர் இவரெனத் தேர்ந்து எடுத்துச் சபைத் தலைவரால் வெற்றிலை (தாம்பூலம்) கொடுக்கப்படுகிறது. அதன் பின்னர்தான் புலவர் அட்டவணையில் பெயர் பதியப்படுகிறது. கொங்கு வேளாளரின் திருமணங்களில் இப்புலவர்கள் கம்பர் வாழி சொல்லாவிடில் மணச்சடங்கு பூர்த்தியானதாகக் கருதப்படமாட்டாது.

புலவர் அப்பொழுது வராவிடில் அவர்களது உரிமையான சன்மானத்தை எடுத்து வைத்துப் பின்னரே பார்ப்பார், முதலியோர்களுக்குப் பூரி (தட்சிணை) முதலியன உதவும் வழக்கம் ஐந்து படிகாரரிருக்கிற நாடுகளில் இன்னும் நடந்து வருகிறது. திருமணம் செய்வோரிடத்து ஏதேனும் சாதி, ஆசார முதலிய குறைகளிருந்தால் புலவர் வாழி சொல்லப் புகமாட்டார். புதிதாகப் பெண் கேட்கப் புறப்படும் பொழுதும், மற்றும் சில சாதி, ஆசார நற்காரியங்கள் பேசும் பொழுதும், செய்யும் பொழுதும் தமிழ்ப் புலவர்களில் ஒருவரேனும் இருக்க வெண்டுமென்று கொங்கு வேளாளர்கள் விரும்புகிறார்கள்.

---

4. கொங்கு மண்டல சதகம், கார்மேகக் கவிஞர், பா.30
5. கொங்கு மண்டல சதகம், கார்மேகக் கவிஞர், பா.31.

நாட்டதிகாரம் பெற்ற பழைய பரம்பரையைச் சார்ந்தவர்களிடத்து இவ்வழக்கம் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. பெண்பாலரும் புலவர்களை அன்புடன் உபசரிக்கின்றார்கள். புதிதாக உள்ள பணக்காரர்களை விடப் பழைய பரம்பரையைச் சேர்ந்த ஏழையை மனதாரப் புலவர்கள் மதிக்கின்றார்கள்.

## பாடலால் அறியப்படும் செய்தி

'கம்பர் வாழி-16' என்னும் பாடலால் கொங்கு வேளாளர்களின் திருமணச் சடங்கு முறைகளையும், புலவர்கள் மதிக்கப் பெறும் பேற்றினையும் அறிய முடிகின்றது. 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என்று தமிழர்கள் வாழ்த்தும் வழக்கம் இப்பாடலிலிருந்துதான் எழுந்திருக்குமோ என்ற எண்ணம் எழுகின்றது. எவ்வாறு இருப்பினும், பதினாறு செல்வங்களைப் பெற்று வாழ்க என்று வாழ்த்துவதைப் போன்று கம்பர் பதினாறு பாடல்களில் வாழி பாடியுள்ளார். இச்சுவடியில் இருபது பாடல்கள் காணப்படுவதால், பின் வந்த புலவர்கள் மேலும் சில பாடல்களைப் பாடிச் சேர்த்துள்ளமையை அறிய முடிகின்றது.

தமிழுலகிற்கும், கொங்கு வேளாளர் சமுதாயத்திற்கும் பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தில் இங்கு இப்பாடல்கள் குறிப்புரையுடன் தரப்படுகின்றன. இக்கட்டுரையாளரால் பாடலின் தலைப்புக்கள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.

# கம்பர் வாழி - 16

### (காப்பு)

1. மணமது செய்யும் நன்மை வாசலில் வந்து தோன்றி
குணமுட னிரண்டு கையுங் கூப்பினே னுனது சாட்சி
பணமது பாலும் நெய்யும் பாக்குவெற் றிலையும் வைத்துக்
கணபதி வாழி சொல்வேன் கந்தனுங் காப்புத் தானே.

### (வெண்பா)

2. வாழிமணஞ் செய்தமண வாளப் பிள்ளைதனை
ஆழிசெங்கண் மாலோனும் அம்புயனும் - வேழமுகத்
தைங்கரனும் வேலவனும் ஆதி வயிரவனுஞ்
சங்கரனும் காத்திடவே தான்.

### (திருமணச் சடங்கு முறைகள்)

3. நாற்கரசுங் கால்நாட்டி நல்ல முகூர்த்தமிட்டுப்
பேய்க்கரும்பு நாட்டிப் பிரமண்ணிட்டு - பூக்கமலர்
நற்பிடியும் வேலவர்முன் நன்மங்கிலி யஞ்சிறக்கக்
கைப்பிடித்துக் கொண்டான் கலந்து.

4. விளக்குநீர் கரகம் வெண்பாலி கையாந்
துளக்கமணி மகுடஞ் சூட்டி - முழக்கமுடன்
இப்புவியோ ரென்றும் இயல்சேர் மணவாளன்
கைப்பிடித்துக் கொண்டான் கலந்து.

5. அரசிலையைப் பைங்கோலஞ் செய்து அதின்மேல்
விரைசெறிசேர் செந்தாம ரையைமேவி - நரசிங்கத்
தென்மங்கை யன்னைத் தெருவையே நீர்செய்த
தன்மங்கை கூடியவர் தான்.

### (தம்பதியினரை வாழ்த்துதல்)

6. மணவாளன் வாழி மனையாட்டி வாழி
மணவாளன் தந்தை தாய்வாழி-மணவாளன்
சுற்றத்திரு கிளையுஞ் சூழ்ந்திருந்த வான்கிளையுங்
குற்றமற வாழ்வீர் குளிர்ந்து.

7. ஆல்போல் தழைத்து அருகதுபோல் வேரூன்றி
நாள்போல் கிளைபெருத்து நன்றாக - சீர்போன்ற
வாகைபுனையும் மணவாளன் மங்கையுடன் மிகவாழ்க
வாழ்கையென்றும் நீடூழி வாழி.

8. வருகால் வருவென்றே வாழ்வாய் வளருவாய்
ஒருகாலா யிரங்கா லாவாய்-யிருபோதும்
பூமடந்தை வாழ்த்திப் புவிமடந்தை போற்றிசெய்ய
மாமடந்தை நீடூழி வாழி.

9. புத்திர சம்பத்தும் புண்ணியமே உண்டாகி
வித்தக னைப்போலே விளங்குவாய் - எத்திசைக்கும்
பூமாது சேரப் புயமா தயவுடனே மாமாது நிடூழி வாழி.

10. மணமிசைந்து நன்றாக வாழ்த்தும் புலவோர்க்குப்
பணமய்ந்து நன்றாகப் பால்வைத்து - குணமுடனே
சிங்கார மாகக் கல்யாணம் செய்தோர்கள்
மங்காமல் நீடுழி வாழி.

11. மாறாமல் பாலமுர்தம் மக்கள் பதினாறும்
வீறாகப் பெற்றே விளங்குவாய் - சீராக
சீதேவி முன்நிற்கச் செல்வரும் தேவியரும்
மாதேவருங் காத்தருளே வந்து.

12. ஆயிரவர் சீர்பெறுவீர் அம்புவியை ஆளுவீர்
மாயப்பே ரென்கின்ற பேர்படைப்பீர்-நோயற்று
நல்லுடம் பெய்வீர் நமனார்க்கு நஞ்சாவீர்
பல்லூழி வாழ்வீர் பரிந்து.

## மட்டு விருத்தம்

13. முரசுடன் கொம்பு காளம் முழங்கிட விளங்கு மண்மேல்
திருமகள் திருமால் போலே சேர்ந்துடன் மங்கை வாழி
அருமைமங் கிலியம் வாழி ஆயிரத் தாண்டும் வாழி
இருவரும் பல்கி நன்றாய் இன்றுபோல் வாழி தானே.

## கலித்துறை

14. மணநாறு கொன்றையுந் தார்சடை யோனும் மணவல்லியும்
பணநாட ரவினிற் பள்ளிகொள் வோனும் பகவதியுந்
துணைநான்முக முள்ள தோன்றலும் பன்னிரு தோளுமுள்ள
கணநாதரு மிந்தக் கல்யாண நன்மையைக் காப்பவரே.

15. கண்ணு மனமுங் களிகூர ஞானிகள் கண்டுதொழ
எண்ணும் சிறந்த வழித்துணை நாதரிடம் பாகம்வைத்துப்
பண்ணும் பயோதரப் பங்கயச் செல்வி பச்சவல்லி
பெண்ணும் அழகு மணவாளப் பிள்ளைதன் பேரழகே.

16. ஆலிக்குந் தேவர் அருகது சூட்ட அருக்கன்மதி
பாலிக்குந் தூபந் தனைக்காட்ட மாமணப் பந்தலிலே
கூலிக்குள் ளாக புனல்நீட்ட அய்யர் கைநீட்டக்கண்டோம்
தாலிக்கை நீட்டு மம்மாசிவ காம சவுந்தரியே.

## கலிப்பா

17. வெள்ளி வெற்பனும் வானோரும் மற்றுளோர்
வென்றி மாலுடன் வேதாவுங் கூடியே
அள்ளி மிக்க அருகோட ரிசியும்
அழகு சேரவே சென்னியில்வைப் பார்காண்
தெள்ளு முத்தமிழ்ச் சங்கரன் காற்கவே
தெரிவை மாதரும் பல்லாண்டு கூறவே
வள்ளி யம்மனும் வேலனும் போலவே
வாழி வாழி நன்மாமணம் வாழியே.

18. மருப்பு லாவுங் குழல்மடமா துக்கும்
மாப்பிள் ளைக்கும் பொருத்தங்கள் கேட்கவே
விருப்பமாகிய சாத்திர கோசலர்
மிகுத்த வேதியன் சொன்னமுகூர்த் தத்தால்
பொருப்பு லாவும் புவிமண வாளனார்
பூங்கொ டிக்குத் தரித்திட்ட தாலிநூல்
இருப்பு நூலது வாகிவரம் பெற்று
இன்றும் என்றும் இனிதூழி வாழியே!

19. சந்த மான திருவுரைச் சாலையும்
தகைமை யென்னத் திருக்காவ ணங்களும்
இந்த லோகத் தில்காணோம் புதுமையை
இந்திர லோகத் தவர்வந்து பார்க்கவே
வந்து தேசிகன் பால்தமக்கிட் டுண்டு
மாசிலாப் பதமீ ரெட்டையும் பெற்றுமே
இந்த வாசல் மணவாளனும் பெண்ணும்
இன்றுபோ லென்றும் இனிதூழி வாழியே!

20. தந்து பால்கடல் மாலுந்திரு வும்போல்
நான்மு கத்தனும் வாணியும் போலவே
எந்தை பார்பதி யீசனும் போலவே
இன்றும் என்றும் மண்மேல் சிறந்துதான்
சந்திர சூரிய ருள்ளநல் காலமுஞ்
சகல சம்பத்தும் புத்திராதி களுமாய்
இந்த வாசல் மணவாளனும் பெண்ணும்
இன்றும் என்றும் இனிதூழி வாழியே!

2. ஆழி-சக்கரம், கடல். செங்கண்-சிவந்த கண், மாலோன்-திருமால். அம்புயன்-பிரமன்.வேழமுகத்தைங்கரன்-யானை முகத்தினையுடைய விநாயகன். வேலவன்-முருகன். வயிரவன்-பைரவன். சங்கரன்-சிவன்.

3. நாற்கரசு-நாள்கரசு. பிரமண்ணிட்டு-புதுமண்வைத்து. பிடி-கைப்பணம், நம்பிக்கை.

4. பாலிகை-பானை.

5. அரசிலை-அரசமரத்தின் இலை. பைங்கோலம்-பசுமையான கோலம். விரைசெறிசேர்-வாசனை மிகுந்த. செந்தாமரை-சிவந்த தாமரை. மேவி-நிரவி. நரசிங்கம்-திருமால் தசாவதாரத்தொன்று.

6. சுற்றத்திருகிளை - திருமணத் தம்பதியினரின் குடும்பத்தார்கள். வான்கிளை-வானோர்கள்.

7. ஆல்-ஆலமரம். அருகு-அருகம்புல். வாகைபுனையும்-வாகை மாலை - வெற்றிமாலை அணிகின்ற.

8. வருகால்-வருகாலம், எதிர்காலம்.. பூமடந்தை-பூமகள்-இலக்குமி. புவிமடந்தை-பூமிதேவி. மாமடந்தை-மேன்மையான பெண்.

9. புத்திர சம்பத்து-புத்திர பாக்கியம், பிள்ளைப் பாக்கியம். வித்தகன்-அறிஞன். பூமாது-இலக்குமி.

11. சீதேவி-இலக்குமி.

12. நமன்-யமன். நச்சு-விடம். பல்லூழி-அநேக யுக காலம்.

13. முரசு-ஒரு வகை மேளம். கொம்பு, காளம்-ஊது கருவிகள். பல்கி-பெருகி.

14. மணநாறு-நறுமணம் மிகுந்த. தார்-மாலை. சடையோன்-சடைமுடியுடையவன் - சிவன். மணவல்லி-மணப்பெண். அரவினிற் பள்ளி கொள்வோன்-திருமால். பகவதி-பார்வதி. நான்முகன்-பிரமன். பன்னிருதோளன்-முருகன். கணநாதர்-விநாயகன்.

15. களி-மகிழ்ச்சி. பயோதரம்-பால்,முலை. பங்கயச் செல்வி-தாமரையில் வீற்றிருப்பவள், சரசுவதி.

16. ஆலி-அமுதம். அருக்கன்-சூரியன். மதி-திங்கள், நிலவு. பாலிக்கும்-அருளுதல். தூபம்-ஒளிபுகை. காலி-பசுக்கூட்டம். புனல்-நீர். தாலி-மங்கிலியநாண்.

17. வெள்ளி-சுக்கிரன். வெற்பன்-குறிஞ்சி நிலத் தலைவன். வானோர்-தேவர். வென்றி-வெற்றி. மால்-திருமால். வேதா-பிரமன். ரிசி-முனிவர். சென்னி-தலை. சங்கரன்-சிவன். தெரிவை-பெண்.

18. மருப்பு-மருகு-வாசனை. பொருப்பு-மலை.

19. சந்தம்-அழகு. திருவுரைச் சாலை-திருவுருவச்சாலை-விக்கிரகம் மிகுந்த அறை. மண்டபம். காவணம்-மணப்பந்தல். லோகம்-உலகம், பூமி. தேசிகன்-உபாத்தியாயன், குரு. மாசிலா-குற்றமில்லாத. பதம்-பாதம். ஈரெட்டு-பதினாறு செல்வங்கள்.

20. நந்து-சங்கு. மால்-திருமால். திரு-திருமகள். நான்முகத்தன்-பிரமன், வாணி-சரசுவதி. எந்தை-என் தந்தை. பார்பதி-பார்வதி. ஈசன்-சிவன். சந்திர சூரியர்-சந்திரரும் சூரியரும். சகல சம்பத்து-எல்லாவிதமான செல்வம். புத்திராதி-புத்திர பாக்கியம்.

## பயன்பெற்ற நூல்கள்

### அ) சுவடிகள்


1. கம்பர் வாழி-16, எண் 572, ஆசியவியல் நிறுவனம், சென்னை- 600 119.

2. கம்பர் வாழி-16, எண் 573, ஆசியவியல் நிறுவனம், சென்னை-600 119.


### ஆ) அச்சு நூல்கள்


3. கொங்கு மண்டல சதகம், டாக்டர் இசுந்தரமூர்த்தி,(பதி.) தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, கோவை,1986.

4. கொடுமணல் இலக்கியங்கள், புலவர் செ.இராசு (பதி), தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.1981.

# தமிழ் ஆண்டு எது?

திரு.வ. வேம்பையன்

வாழ்வில் போனால் திரும்பப் பெற முடியாதவை மூன்று. ஒன்று காலம், மற்றவை மானம், உயிர். குடும்பம், குமுகாயம், ஊர், நகர், நாடு, உலகம் பற்றிய நிகழ்ச்சிகளைக் கணக்கிடுவதற்குக் கால அளவை இன்றியமையாத ஒன்றாகிறது.

*'நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்*
*வாள துணர்வார்ப் பெறின்'*

என்ற குறள் மூலமும் காலம் அறிதல் அதிகாரத்தின் வழியும் காலத்தின் அருமையைத் திருவள்ளுவர் உணர்த்துகிறார்.

நம் முன்னோர்கள் காலத்தை நொடி, நாழிகை, நாள், கிழமை, திங்கள், ஆண்டு, ஊழி என்று வானியல் முறைப்படி வரையறை செய்துள்ளனர். நாழிகை 60 ஒரு நாளாகவும், ஒரு நாளை வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்று ஆறு சிறுபொழுதுகளாகவும், ஓர் ஆண்டை கார், கூதிர், முன்பனி, பின்பனி இளவேனில், முதுவேனில் என்று ஆறு பெரும்பொழுதுகளாகவும் பிரித்துள்ளார்கள்.

காலத்தைக் கணக்கிடுவதில் இத்துணைக் கவனம் செலுத்திய தமிழர்கள், வாழ்க்கை, வரலாற்று நிகழ்ச்சிகளைத் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு ஆகியவற்றுக்குப் பொதுவான தொடர் ஆண்டுக் கணக்கால் குறிப்பிடும் வழக்கத்தைப் பின்பற்றவில்லை என்பது வியப்பாக இருக்கிறது; வருத்தம் தருகிறது.

தலைநகரின் தோற்றம், பேரரசன்பிறப்பு, அரசர்கள் முடிசூட்டிக் கொண்ட ஆட்சித் தொடக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த அரசர் பெயரோடு தொடர் ஆண்டு கடைப்பிடித்து வந்தனர் என்று சங்க இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் பொதுவான தொடர் ஆண்டால் காலத்தைக் கணக்கிடல் வேண்டும் என்ற கருத்து அரசர்களிடம் இல்லை என்று தோன்றுகிறது. தமிழ்ப் புலவர்கள். அறிஞர்கள். சான்றோர்கள் அதன் இன்றியமையாமையை அரசர்களுக்கும் பொது மக்களுக்கும் எடுத்துக் கூறியதாகவும் தெரியவில்லை.

இந்தச் சூழ்நிலையையும் தமிழர்களிடம் மண்டிக் கிடந்த கடவுள், மதம், சாதி, மூடநம்பிக்கைச் செல்வாக்கையும் அரசர்களிடம் பெற்றுள்ள நெருக்கத்தையும் பயன்படுத்திப் 'பிரபவ' முதல் 'அட்சய' வரை உள்ள 60 ஆண்டுமுறை இடைக்காலத்தில் தமிழகத்தில் புகுந்துவிட்டது.

அறுபது ஆண்டுகளின் பெயர்களில் ஒன்று கூட தமிழ் இல்லை. ஆண்டுகள் 60 பற்சக்கர முறையில் இருப்பதால் 60 ஆண்டுகளுக்கு மேல் உள்ள காலத்தைக் கணக்கிடுவதற்கு உதவியாகவும் இல்லை. அதற்கு வழங்கும் கதையோ அருவருக்கத் தக்கதாகும்.

இப்போது வழங்கும் 60 ஆண்டுப் பெயர்கள் சாலிவாகனன் என்பவனால் அல்லது கனிஷ்கனால் கி.பி78இல் ஏற்பட்டவை. இவை வடநாட்டு அரசினால் ஏற்பட்டவையாதலின், வடமொழிப் பெயர்களாய் உள்ளன.

அறுபது ஆண்டுச் சக்கரம் சுற்றிச் சுற்றி வருவதனாலும் மிகக் குறுகியதாலும் சரித்திர நூற்குப் பயன்படாது. உருத்ரோத்காரி என்று கூறினால் எந்த உருத்ரோத்காரி என்று அறியப்படாமையால், இந்த அளவு இன்மை பற்றித் தமிழுக்கு ஒரு குறையும் இல்லை.

இந்தக் குழப்பமான ஆண்டு முறையால் குடும்பம், குமுகாயம் (சமுதாயம்), நாடு, உலகம் ஆகியவற்றின் வாழ்க்கை, வரலாற்று நிகழ்ச்சிகளை 60 ஆண்டுகளுக்கு மேல் உள்ள காலத்தைக் கணக்கிடுவதற்கு முடியவில்லை.

இந்த முறையால் தமிழர் மொழி, மரபு, மானம், பண்பு, வாழ்வு முதலியவற்றுக்கு ஏற்பட்டுள்ள அழிவும் இழிவும்

எண்ணிப்பார்த்து, உணர்ந்து தெளிந்த தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் 1921ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகள் தலைமையில் கூடி ஆராய்ந்தார்கள்.

திருவள்ளுவர் இயேசு கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் என்றும், அவர்பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது என்றும் முடிவு செய்தார்கள்.

இந்த முடிவு செய்தவர்களுள் தலையான தமிழ் அறிஞர்கள் தமிழ்க் கடல் மறைமலை அடிகள், தமிழ்த் தென்றல் திரு.வி.க., தமிழ்க்காவலர் சுப்பிரமணிய பிள்ளை, நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் ஆவார்கள்.

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் திங்கள் தை; இறுதித் திங்கள் மார்கழி; புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள். கிழமைகள் வழக்கில் உள்ளவை. திருவள்ளுவர் காலம் கி.மு.31. எனவே, ஆங்கில ஆண்டுடன் 31ஐக் கூட்டினால் வருவது திருவள்ளுவர் ஆண்டு. (1997+31 +2028).

தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971 முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும் 1972 முதல் தமிழ்நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவல்களிலும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு ஆகியவற்றின் நலமும் வளமும் நாடும் அனைவரும் சாதி, மதம், கட்சி, அரசியல் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு நின்று, அறுபது ஆண்டு முறையை அகற்றவும், தமிழ் ஆண்டாகிய திருவள்ளுவர் ஆண்டு முறையைத் தம் வாழ்வில், வழக்கில், வரலாற்றில் பின்பற்றவும், பரப்பவும் வேண்டும்.

# படிப்பினை அளிக்கும் பரமக்குடிக் கல்வெட்டு

பேரறிஞர் ஆர்.கே. அழகேசன்

இராமநாதபுர மாவட்டத்துப் பரமக்குடியிலிருந்து 2கி.மீ. தொலைவில் உள்ளது வேந்தோணி என்ற கிராமம். இவ்வூரின் மாரியம்மன் கோயிலருகே 700 ஆண்டுகட்கு முந்தைய கல்வெட்டொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

முன்னாள் மாணவர் செந்தில்குமார் கூறியதன்பேரில் அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் அழகேசன், தொல்பொருளியல் நிபுணர் வேதாசலம் உள்பட மூவரும் வேந்தோணியில் முகாமிட்டோம். வெட்டெழுத்தை உற்றுப் பார்க்காதே; மீறிப்பார்த்தால் உன் தலையெழுத்து. . . . பைத்யந்தான். . . . என்னும் வழக்கமான கிராமிய அச்சுறுத்தல் எங்கள் முன் பவனிவந்து பலனிழந்தது.

முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் கல்லெழுத்து அது. அவனது 28வது ஆண்டில் (1296) சாசனம் பொறிக்கப்பட்டதாகத் தெரிந்தது.

### மையச் செய்தி:

அந்தணர்கள் வசிக்கும் மதிதுங்கச் சதுர்வேதி மங்கலத்தையும் அதனருகே உள்ள குளத்தையும் காளைய கண்டன் கோட்டையூர் மறவர்கள், மறக்காமல் பாதுக்காக்க வேண்டும் என்பதுவே கல்வெட்டுணர்த்தும் உறுதிமொழி.

### கல்வெட்டின் அமைப்பு:

ஒன்றரை அடிநீளமும் ஒன்றேகால் அடி அகலமும் கொண்ட இக்கல்வெட்டு இரு பகுதிகளாக்கப்பட்டுள்ளது. 14 வரிகள் ஒரு பாதியிலும் 12 வரிகள் மறுபாதியிலும் பொறிக்கப்பட்டு, நடுவில் வெண்கொற்றக்குடையுடன் கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியில் சொல்லிய செய்திகளே சில வித்யாசங்களுடன் அதனை அடுத்த பகுதியுள் செதுக்கப்பட்டுள்ளன.

## ஆசிரியம்:

13 ஆம் நூற்றாண்டில் பிரமதேய குடியிருப்பை மற்றொரு ஊரார் பாதுகாத்திருந்தனர். அதாவது அந்தணர்கள் வாழ்ந்த ஸ்ரீ மதிதுங்க சதுர்வேதி மங்கலப் பகுதியை மறவர்கள் "ஆசிரியம்" என்ற பெயரில் ஊதியம் பெற்றுக் கொண்டு ஊழியஞ் செய்தனர். இவ்வாறு ஊரையும் உடைமைகளையும் பாதுகாத்த செய்தியே "நோக்கிக் கொள்க" என்னும் பெயரால் உறுதியாக்கப்பட்டிருந்து.

## மதிதுங்கன் - யார்:

'மதிதுங்கன்' என்னும் பெயரைக் கொண்ட பேருருக்குக் கட்டுப்பட்டது, வேந்தோணி. ராமநாதபுரக் கடற்கரை அதிகாரியாகவும் மாளவச் சக்ரவர்த்தி என்றவனும் குலசேகர பாண்டியனிடம் சிறப்புற விளங்கியவனுமே இவ்வூர்க் கல்லெழுத்தில் மதிதுங்கனாகக் காட்டப்பட்டுள்ளான். இவ்வதிகாரியைப்பற்றி மருங்கூர், புதுக்கோட்டை, திருப்புல்லாணிக் கல்வெட்டுகள் பரவலாகக் குறிப்பிடுகின்றன.

பரமக்குடி அருகே தாளையடிக்கோட்டை, காமன்கோட்டை, சிறகிக்கோட்டை, காளிய கோட்டை என்னும் பெயருடைய ஊர்கள் உள்ளன. கல்வெட்டில் குறிக்கப் பெற்ற காரிய கண்டன் கோட்டைச்செம்பி நாட்டு மறவர்கள் இப்பகுதியில்தான் வாழ்கின்றனர். ஆனால் பிராமணக் குடியிருப்பு இல்லை.

20கி.மீ. தொலைவுகளில் பஞ்சனூர், மூவனூர், பொட்டக வயல் என்னும் ஊர்களை அடுத்து, கல்வெட்டுள் காணப்பெற்ற அகரம், சதுர்வேதிமங்கல குடியிருப்புகள் தென்படுகின்றன. குறிக்கப்பெற்ற ஊர்களும் மறவர்குல மக்களும் அடுத்தடுத்து இருந்த போதும் அதற்கான காரண காரியங்களைத் தெரிந்தவர்களாக இன்றில்லை.

மத இனதுவேஷங்கள் பெருகி வரும் இவ்வேளையில் மனித நேயத்துடன். . . மெலியாரை வலியார் அடிக்காமல் பாதுகாக்க வேண்டும் என்னும் "பழைய ஏற்பாடே" இச்சாசனச் செய்தி.

## எல்லோருக்கும் தொல்காப்பியம்

- பேரறிஞர் நா. பாலுசாமி

முன் இதழ்த் தொடர்ச்சி

### (தொல் - சொல் - பெயரியல்)

### சூத்திரம் 183

(ஒருமைப் பெயர்)

*ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்*
*ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே.*

(ப.உரை.) ஒருமை சுட்டிய - ஒருமையைக் குறித்த, எல்லாப் பெயரும் - எல்லாப் பெயர்களும், ஒன்றற்கும் - அஃறிணையில் ஒருமைக்கும், ஒருவர்க்கும் - உயர்திணையில் ஒருமைக்கும், ஒன்றிய நிலை - பொருந்தும் தன்மையவாம்.

ஒருமையைச் சுட்டும், இயற்பெயரும், சினைப் பெயரும், சினை முதற்பெயரும் ஆகிய மூன்று பெயர்களும் அஃறிணை ஒன்றுக்கும், உயர்திணை, ஒருவர்க்கும் உரியவாம்.

(வி.உரை.) எல்லாப் பெயரும் - ஒருமை இயற்பெயர், ஒருமைச் சினைப்பெயர், ஒருமைச் சினை முதற்பெயர் ஆகிய மூன்றும் ஒன்றுதல் - உரித்தாதல், பொருந்துதல்.

(எ-டு) கோதை வந்தது - ஒருமை இயற்பெயர் (அஃறிணை)

அ) கோதை வந்தான் / கோதை வந்தாள் } உயர்திணையில் ஆண், பெண் என ஒருவரைக் குறித்தது.

(கோதை - இயற்பெயர், இயல்பாக இடப்பட்ட பெயர்) செவியிலி (காது இல்லாதது) வந்தது - ஒருமைச் சினைப் பெயர் (அஃறிணை)

ஆ) செவியிலி வந்தான்
செவியிலி வந்தாள் } உயர்திணை ஆண், பெண் என ஒருவரைக் குறித்தது.

(செவியிலி - காதற்றவள்; செவி-சினை, உறுப்பு இது சினைப் பெயர்)

இ) கொடும்புற மருது வளர்ந்தது - சினை முதற் பெயர் (அஃறிணை ஒருமை)

கொடும்புற மருது வளர்ந்தாள்
கொடும்புற மருது வளர்ந்தாள் } உயர்திணை ஒருமை; சினை முதற் பெயர்.

(கொடும்புறம் - வளைந்த முதுகு; மருது இயற்பெயர்; புறம் - சினைப் பெயர்)

## சூத்திரம் 184

***தாம்என் கிளவி பன்மைக்கு உரித்தே***

(ப.ரை.) தாம் என் கிளவி - தாம் என்னும் பெயர், பன்மைக்கு உரித்து - இருதிணையிலும் பன்மையைச் சுட்டும் தன்மையது.

தாம் என்பது உயர்திணை, அஃறிணை இரண்டிலும் பன்மை குறித்து வரும்.

(வி.ரை.) பொதுவாகப் 'பன்மை' என இருப்பதால் இருதிணையும் கொள்ள வேண்டும். 'ஏ' - அசை. கிளவி பெயர்.

(எ.டு.) அவர்தாம் வந்தார்
தாம் பலர் } உயர்திணைப் பன்மை (பலர்பால்)
அவைதாம் வந்தன
தாம் பல } அஃறிணைப் பன்மை (பலவின்பால்)

## சூத்திரம் 185

***தான்என் கிளவி ஒருமைக்கு உரித்தே.***

(ப.ரை) தான் என் கிளவி - தான் என்னும் பெயர்
ஒருமைக்கு உரித்து - இருதிணையிலும் ஒருமைப்பால் சுட்டும்

(எ-டு) அதுதான் வந்தது - அஃறிணை ஒருமை (ஒன்றன்பால்)

அவன்தான் வந்தான் } உயர்திணை ஒருமை
அவள் தான் வந்தாள் } (ஆண்பால், பெண்பால்)

## சூத்திரம் 186

***எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி***
***பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே.***

(ப.உரை.) எல்லாம் என்னும் பெயர் நிலைக் கிளவி - எல்லாம் என்னும் பெயர்; பல்வழி நுதலிய - பன்மை குறிக்கும்; நிலைத்து ஆகும் - நிலைமையது ஆகும்.

எல்லாம் என்னும் பொதுப்பெயர் உயர்திணை, அஃறிணை இரண்டிலும் பன்மை குறித்து வரும்.

(வி.உரை.) பெயர் நிலைக் கிளவி - பெயர்; பல்வழி - பல பொருள்; வழி - இடம்; இனி, ஒரு பொருளின் பல இடங்கள் (இடம் முழுதும்) என்னும் பொருளும் தரும்.

(எ-டு) எல்லாம் வந்தன - அஃறிணைப் பலவின்பால்

எல்லாம் வந்தோம் } உயர்திணைப்
எல்லாம் வந்தார் } பலர்பால்

உடம்பு எல்லாம் வலி — ஒரு பொருளில் பல இடம் (முழுமையும்)

## சூத்திரம் 187

***தன்னுள் உறுத்த பன்மைக்கு அல்லது***
***உயர்திணை மருங்கில் ஆக்கம் இல்லை.***

(ப.உரை.) தன்னுள் உறுத்த - (எல்லாம் என்பது) தன்மையிடத்து, பன்மைக்கு அல்லது - பன்மையாகிய பலர்பாலுக்கு அல்லது, உயர்திணை மருங்கில் - உயர் திணையில், ஆக்கம் இல்லை - வருவதில்லை.

உயர்திணைப் பலர்பாலில் தன்மையிடத்தில் மட்டுமே எல்லாம் என்பது வரும்; முன்னிலை, படர்க்கை இந்த இரண்டிடங்களிலும் வராது.

(வி.ரை.) தன்னுள் உறுத்தபன்மை - தன்மைப் பன்மை. ஆக்கம் இல்லை - வருவது இல்லை; ஆகாது என்பதாம். தன்மையிடம் உயர்திணைக்கே உரியது; அஃறிணைக்குத் தன்மை இல்லை.

சேனாவரையர் கருத்தின்படி எல்லாம் என்பது உயர்திணைத் தன்மைப் பன்மைக்கு மட்டும் வரும்; முன்னிலைப் பன்மை, படர்க்கைப் பன்மைகளில் வராது என்பதாம்.

ஆனால், எல்லா மக்களும், எல்லாப் பெரியோரும் எனப் படர்க்கையிலும் வருகின்றதே எனின் அஃது இடவழுவமைதியாகக் கொள்க என்பது அவர் கருத்து.

## சூத்திரம் 188

*நீயர் நீயென வரூஉம் கிளவி*
*பால் தெரிபிலவே உடன்மொழிப் பொருள*

(ப.ரை.) நீயிர் நீ என வரும் - நீயிர் என்றும் நீ என்னும் வருகின்ற, கிளவி - முன்னிலைப் பெயர்கள், பால் தெரிபு இல - திணை வேறுபாடு தெரிய வருவன அல்ல, உடன் மொழி பொருள - ஒரு சேர வரும் பொருளினவாம்.

நீயிர், நீ என்று முன்னிலைப் பெயர்கள் உயர்திணையா, அஃறிணையா என்பதனை வேறு சில விரவுப் பெயர்கள் போல வினை முற்றால் தெளிவுற உணர்த்தமாட்டா.

(வி.ரை.) பால் - திணை. வரூஉம் - அளபெடை, வரும் என்பதே சொல். உடன் மொழி - உடன் சேர்த்துக் கூறும் தன்மை.

(எ-டு) நீயின் சென்றீர், நீயிர் செல்மின் என்றும், நீ சென்றாய், நீ சென்றனை, நீ காண்டி என்றும் வரும்.

(தொடரும்)

# தவமா செய்தோம்!

- நன் முல்லை

இன்பத்துப் பால்கலப்பால் இமை திறந்தோம்!
இமை மூடும் காலம்வரை இன்பம் இல்லை!
துன்பத்துப் பாலானோம்! ஒதுக்கப் பட்டோம்!
தூங்காத கண்களுக்கே உறவாய் ஆனோம்!
அன்புப்பால் வற்றியதால் அன்னை மாரே
கள்ளிப்பால் ஊட்டுகிறார் கதறு கின்றோம்!
தன்பாலைத் தாய்ப்பாலே குடிக்க லாமா?
தாலாட்டே ஒப்பாரி படிக்கலாமா?

சேய்நிலையில் நெல்மணிக்குத் தப்பி னாலும்
சிறுமியென வளர்கையிலும் என்ன துன்பம்!
வாய்திறந்தால் மூதேவி! சனியன் என்பார்!
வயிற்றுக்கே வாழ்வதற்கா வயிற்றில் வந்தோம்!
தேய்கின்றோம்! தெருப்பெருக்கும் துடைப்பம் ஆனோம்!
தீக்குச்சி அடுக்குகின்றோம் ஒளி இல்லாமல்!
காய்கின்றோம் கண்நதியில் கண்ணீர் இல்லை
காய்ந்துவிட்ட பயிரானோம்! உரமே இல்லை.

சிற்றூரில் களையெடுத்துக் களையாய்ப் போனோம்!
சிறுநகரில் சித்தாளாய்ச் செலவாய்ப் போனோம்!
பொற்புவளர் ஆலைகளில் பஞ்சாய்ப் போனோம்!
புதைசேற்றில் சிக்குண்ட பசுவாய்ப் போனோம்!
குற்றவேல் பணிசெய்தே கூனிப் போனோம்!
கொத்தடிமை யாயிருந்தே குமரி ஆனோம்!
மற்றென்ன? யாருக்கும் மலிவாயப் போனோம்!
மங்கையராய்ப் பிறப்பதற்கு தவமா செய்தோம்?

பூவாடை வீசிவரப் பூத்தோம்; முல்லைப்
பூவாதி மணப்பதற்குப் பூத்தோமம் இல்லை!
'ஆஆ'வென்று அழகுண்பார் ஆண்கள்; அள்ளி
அணைத்தெம்மை மணப்பதற்கு ஆண்கள் இல்லை
'காகா'வென் றழுகின்றோம்! பருவம் தொல்லை!
கண்ணனுக்கும் சேலைதர இதயம் இல்லை!
நாவாரச் சொல்லிவிட்டால் பாரம் தீரும்!
நடப்பெல்லாம் சொல்வதற்கு முடிய வில்லை!

விற்பனைசெய் பொருளானோம் மதிப்பா உண்டு!
வீதியுலா வருகின்றோம் ரணங்கள் உண்டு!
கற்காலம் வந்தால்தான் தலைமை உண்டு!
காசிருக்கும் வெகுசிலர்க்கே கல்வி உண்டு!
கற்பனையூர் சென்றால்தான் மாலை உண்டு!
கனவுலகம் போனால்தான் சோலை உண்டு!
அற்புதங்கள் நடந்தால்தான் வாழ்க்கை உண்டு!
அதுவரைக்கும் பிறந்ததற்கு அர்த்தம் உண்டா?

**மதுரைத் தமிழ்ச்சங்க நூலகத்திற்கு**
**நூல் நன்கொடை வழங்கியவர்கள்.**

**டாக்டர் இரா. மோகன்** - 100
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

கோச்சடை **திரு. ஆர். குருசாமி (எ) துரைப்பாண்டி** - 60

ஆனையூர் **திரு. ம. முத்துக்கிருஷ்ணன்** - 50

**திரு. அய்யனார்** - 6
மீனாட்சி மிஷன் மருத்துவமனை

# இயற்கைக் கருவூலங்கள்

பொறியாளர் க.சி. அகமுடை நம்பி

பூமியின் மேற்பரப்பு ஒரே மாதிரி இல்லை. கடல்கள் வெப்பத்தை உட்கொண்டு வெளிவிடும் முறை வேறு; நிலப்பரப்பு வெப்பத்தை ஏற்று வெளியிடும் தன்மை வேறு. நிலப்பரப்பும் ஒரே சமமாய் இருப்பதில்லை. காடுகள், மலைகள், பள்ளத்தாக்குகள், மேடு பள்ளங்கள், இவ்வாறு பல அமைப்புக்கள் கொண்டது நிலப்பரப்பு.

ஆகவே பூமி, காற்றுக் கூரையைக் கொண்டிருக்கும்வரை, பூமியின் மேற்பரப்பானது கடல்கள் நீங்கலாக மற்றப் பகுதிகளில், சுருக்கங்கள், மடிப்புகள், மேடு பள்ளங்கள் முதலியவற்றைக் கொண்டு விளக்கும் வரை, மாறுபட்ட தட்பவெப்பநிலை ஆங்காங்கும் பேரளவிலும் இருந்து வரவே செய்யும். ஆகவே, முடிவில்லாமல், ஓய்தலின்றிச் காற்று வீச வேண்டுமென்றே விதித்திருக்கிறது.

## ஞாயிற்றொளி:

கதிரவனின் ஒளியாற்றலை உயிர்களுக்குத் தருகின்ற வாய்ப்பு பயிர்களுக்கு உள்ளது. மனிதனுக்கும் விலங்குகள் போன்ற பிற உயிர்களுக்கும் உணவு சமைக்கும் இந்தப் பயிர்களின் செயல்பாடு பெருவியப்புக்கு உரியது. பயிர்களின் ஒவ்வோர் இலையும் ஒரு சமையல் கூடம் என்று சொன்னாலும் அது மிகையாகாது.

இந்த இலை என்னும் சமையல் கூடத்திற்கு ஒரு பக்கம் நிலத்திலுள்ள நீர் கிடைக்கிறது. அந்நீரில் பயிருக்குத் தேவையான ஊட்டப் பொருள்கள் வந்து சேர்கின்றன. சமையற்கூடம் மிக்க வெப்பத்தால் வெந்துவிடாமல் காத்துக் கொள்ளப் பயிர்கள் பெறுகின்ற நீரில் ஒரு பகுதியை இலைத் துவாரங்கள் வழியே வெளியேற்றிக் கொள்ளும். மற்றொரு பக்கம், வெளிக் காற்றிலிருந்து இலைத் துவாரங்கள் வழியே கரியமில வாயு இச்சமையல் கூடாரத்திற்கு வந்து சேரும்.

இலையில் பச்சையம் என்ற வண்ணக் கலவைப் பொருள் உள்ளது. சூரிய ஒளிக் கதிர்களை ஈர்த்து, ஒருமுகப்படுத்தும்

இதன் திறன் வியப்புக்குரியது. இலையிலுள்ள நீர்த்துளிகளின் மேல் பச்சையம், சூரிய ஒளிக்கதிர்களைப் பாய்ச்சுகிறது. நீர்த்துளி பிளக்கப்படுகிறது. நீரிலுள்ள நீரகக்காற்று (ஹைட்ரஜன்) தனியாகத் துண்டிக்கப்படுகிறது. சூரிய ஒளியிலிருந்து பெறப்பட்ட சக்தி மின்சக்தியாக மாறி, அதனுடன் இணைந்து கொள்கிறது. இதன் மற்றொரு பகுதியான, உயிர்க்காற்று இலைத் துவாரங்கள் வழியே வெளியேறுகிறது.

மின் இயக்கம் பெற்ற உயிர்க்காற்றின் அணு, அங்குள்ள கரியமில வாயுவுடன் சேர, சர்க்கரைப் பொருள் பிறப்பெடுக்கிறது. இந்தச் சர்க்கரைப் பொருளே தாவர உணவின் அடிப்படையாகும். ஒரு சதுர மீட்டர் இலைப் பரப்பில், ஒரு மணிநேரத்தில் ஒரு கிராமுக்கும் அதிகமான சர்க்கரைப் பொருள் உருவாகிவிடும்.

சக்தியை உள்ளடக்கிய சர்க்கரைப் பொருளை, தாவரங்கள் பிற பொருள்களுடன் இணைந்து, மாவுப் பொருளாகவும், புரதமாகவும், கொழுப்பாகவும் மாற்றுகின்றன. இவற்றுக்கான துணைப் பொருட்கள் நிலத்திலிருந்து நீரில் கரைத்து வரும் சத்துக்களாகும். இவ்வாறு தயாரிக்கும் உணவைக் கொண்டு, தாவரம் வளர்கிறது. இனவிருத்தி செய்து கொள்கிறது. இடையே, மனிதனும் மற்ற உயிர்களும் புகுந்து, இலை, பூ, காய், கனி, விதை, மரம் என்று தாவரப் பகுதிகளைப் பெற்றுக் கொள்கின்றன.

சூரிய ஒளியை உணவாக மாற்றுகின்ற ஆற்றல் பயிர்களைவிட மரங்களிடம் மிகவும் அதிகமாக உள்ளது. நன்கு வளர்ந்த மரமே அரை ஏக்கர் பரப்பிற்கும் பச்சையத்தைக் கொண்டிருக்கும். எனவே, ஒரு எக்டேரிலுள்ள பயிர்களைவிட ஒரு மரமே கூடுதலாகக் கரியமில வாயுவை உட்கொண்டு ஆக்ஸிஜனை வழங்கிடும். ஒரு எக்டேரிலுள்ள காடு, ஆண்டொன்றுக்கு 3.7 டன் காரியமில வாயுவை உட்கொண்டு, 2.00டன் பிராணவாயுவைத் தந்திடும். உலகிலுள்ள அனைத்துயிர்களும் இதனால் தான் இயல்பாக வாழ முடிகிறது.

***நிலம்:***

நிலத்தைப் பெண்ணாக உருவகப்படுத்திக் காண்பார்கள் தமிழ்ப் புலவர்கள். "நிலமடந்தைக்கு எழில் ஒழுகும். . . . . ."

என்று வரும் தமிழ்த்தாய் வாழ்த்து நம்முடையது. தாய்க்கு நிகராக நிலத்தைப் போற்றுவது தமிழர் மரபு. நாம் பிறந்த நாட்டைத் தாய்நாடு என்றே போற்றுகிறோம்.

உலகக்கோளில் நிலம் ஏறத்தாழ ஒரு பகுதியாக விரிந்து கிடக்கிறது. இதனை இரண்டு பெரும் பிரிவுகளாகக் காணலாம் கரிசல், செவ்வல் என்ற இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நில வகைகள் பற்பல. உலகம் முழுவதும் கருதிப் பார்த்தால், ஆயிரக்கணக்கான மண்வகைகள் பரவியும் விரவியும் இருப்பதைக் காணலாம். நிலத்திலுள்ள உலோகம், உப்பு வகைகளைப் பொறுத்தும், களிமணல் விகிதத்தைப் பொறுத்தும், நிலத்தின் நிறமும் மண்ணின் வகையும் வேறுப்பட்டு விளங்குகின்றன.

நிலத்தின் மேல் மண், நிலத்தின் மேலுள்ள நீர்நிலைகள், இவற்றை மேவியுள்ள காற்று மண்டலம், தட்பவெப்ப நிலைகள் முதலானவற்றைப் பொறுத்தே உயிரினங்களின் வாழ்வியல் சூழல் அமைகிறது.

**நீர்:**

உலக உருண்டையில் மூன்றில் இரண்டு பகுதிக்கும் சிறிது கூடுதலாக உள்ளது கடல்பரப்பு. ஆனால், கடல் நீரின் உப்பு அதிகமாக இருப்பதால் அது வேளாண்மைக்குப் பயன்படுவதில்லை.

நிலப்பரப்பில் தேக்கம் காணுகின்ற நீரும், நிலத்தடியில் சேருகின்ற நீரும் குடிப்பதற்கும் பயிர் விளைவிப்பதற்கும் பயன்படுகிறது.

“நீரின்று அமையாது உலகு” என்பார் வள்ளுவர். உயிரினங்களுக்குத் தேவையான உணவை உண்டாக்குவதற்கு நீரும் ஓர் அடிப்படைத் தேவை. உணவை உண்டாக்கக் காரணமாகும் நீர், தன்னளவிலும் உணவாகப் பயன்படுகிறது. கோடை வெய்யிலில் நா உலர்ந்து நாம் இருக்கும் வேளையில், தேனமுது கிடைத்தாலும், அதனை வேண்டோம். தாகம் தணிக்கத் தண்ணீர்தான் வேண்டும் என்போம்.

நீர் இல்லையேல், புல்லுக்கும் கூட இங்குப் புகலிடம் இல்லை. பின்னர் எப்படிப் பயிர்களை வளர்ப்பது; வேளாண்மை விளைச்சலைக் காண்பது?

நிலத்து நீர்நிலைகள், நிலத்தடி நீர்ப்பெருக்கு, நீரூற்றுகள் அனைத்துக்கும் வான் இமையே அடிப்படைக் காரணமாகிறது.

**வளரும் பயிர்:**

பயிர்கள் முளைத்து வளர்ந்து அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வளிக்கின்றன. நிலமகள்தான் எத்தனை வகைப் பயிர்களை ஈன்றெடுக்கிறாள்?

நிலத்தின் தன்மைக்கேற்பவும், அதனுடன் சேருகின்ற நீரின் அளவைப் பொறுத்தும், இந்தச் சேர்க்கையை ஊக்குவிக்கின்ற தட்பவெப்பச் சூழலைப் பொறுத்தும் பயிரினப் பரிணாம வளர்ச்சியும் பிரிவுகளும் விரிவு காண்கின்றன. உலகம் முழுவதும் உள்ள பயிர் வகைகள் 3,25,000 என்று கணக்கிட்டுள்ளனர்.

நீரும், காற்றும் நிலத்துடன் சேருவதற்கு, ஞாயிற்றொளி தேவைப்படுகிறது. ஞாயிற்றொளியிலிருந்தே முதுக்குறும் ஆற்றலைப் பயிர்கள் பெறுகின்றன. பயிர்களின் இந்தச் செயல்பாட்டைப் பச்சைய வினை என்கிறோம்.

கரியமில வாயுவை உட்கொண்டு உயிர்வளியைப் பயிர்கள் வெளியிடுகின்றன. பயிர்களின் செறிவு குறையும் போது, காற்று மண்டலத்தில் கரியமில வாயுவின் செறிவு கூடுகிறது. இதனால் புவியின் வெப்பநிலை அதிகமாகும். புவியின் வெப்பநிலை அதிகரித்தால் வாழ்வியல் சூழல் பாதிப்புறும். வாழ்வியல் சூழல் வளம் பெறவும், வலுவான முறையில் நிலைபெறவும், மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதிக்குக் குறையாமல் செறிவான காடுகள் நிலைபெற வேண்டும்.

உணவுப் பொருள்களை மட்டுமே தாவரங்கள் தருகின்றன என்பதில்லை. கட்டுமானத்துக்குரிய மரப்பொருள்கள், நாம் கட்டிக் கொள்வதற்குரிய துணிவகைகள், இன்னும் நிலக்கரி, எண்ணெய், மருந்து வகைகள், எழுதுதாள்கள் என்று மனிதத் தேவைகள் பலவற்றையும் நிறைவு செய்வன வளரும் பயிர்களேயாம். ஆகவே, தாவரங்களிடம் மனிதனின் கனிவுப் பார்வை, எப்போதும் வேண்டும்.

**நம் கடமை:**

ஆகவே, நாம் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்க வேண்டுவன நிலம், நீர் காற்று, பயிரினங்கள் ஆகும்.

வளமான நிலத்தைப் பொன் விளையும் பூமி என்று போற்றுகின்றோம். பொன்னை நாம் எப்படிப் பாதுக்காக்கிறோமோ, அதே அக்கறையுடன் நிலமகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இல்லையேல், நம்மை வாழ்விக்கும் மண் அரிக்கப்பட்டு, சீர்குலைந்து பாழாகிவிடும். காலப்போக்கில் விளைச்சலுக்குத் தகுதியற்ற ஒரு மலட்டுத் தன்மையை அது பெற்றுவிடும்.

அதேபோல்தான், நீரையும் நாம் கையாள வேண்டும். வானின்று பொழியும் மழைநீர், நிலமகளுடன் இரண்டறக் கலக்குமாறு செய்வது, நமது வாழ்வுக்கு வளம் சேர்க்கின்ற செய்முறையே, நீர் வளத்தைப் பெருக்கவும் சேமிக்கவும் இன்னும் நாம் போதிய அளவு முயற்சிகள் மேற்கொள்ளவில்லை.

அண்மைக் காலம் வரை, பெரும்பரப்புகளில் காடுகள் செறிந்து விளங்கின. பருவமழை பொழியும் போது அந்தக் காடுகள், மண் மீது அவை பரப்பியிருந்து இலை தழைகள் மழைநீரை உறிஞ்சி வைத்து, மெல்ல மெல்ல அதனை வெளியேற்றிக் கொண்டிருந்தன. அதனால் ஆண்டு முழுதும் ஆறுகள் நதிகளின் நீரோட்டம் தொடர்ந்து நிகழ்ந்து வந்தது.

ஆனால், அண்மைக்காலமாகக் காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் மனித வாழ்வுச் சூழல் பாதிக்கப்பட்டு வருவதை நாம் கண்டுகொள்ளாமல் இருந்து வருகிறோம்.

மழைநீரை உறிஞ்சி வெளியிடும் காடுகள் போதிய அளவு இல்லாமல் போனதால், பெருமழை நாட்களில் மழைநீர் பெருக்கெடுத்து, காட்டாற்று வெள்ளமாக ஓடி, கடலில் சென்று சேர்ந்து விடுகிறது. குறைவான மழைபெறும் ஆண்டுகளில், நீர்நிலைகளில் நீர் சேராமல், வறட்சியின் பிடியில் நிலமகள் சிக்கிக் கொள்கிறாள்.

மிகவும் சீர்குலைந்துவிட்ட நிலப்பரப்புகளை மேம்படுத்தி, நீர்வளத்தையும் பெருக்கி, மாசுபட்டு வருகின்ற காற்று மண்டலத்தை மேலும் மாசுபடாதவாறு போற்றிப் பாதுகாப்பது நம் கடமை.

# மகளிர் கூந்தல் - பண்பாட்டுச் சின்னம்

பேரறிஞர். மா. சுசீலா

*மகளிரின் கூந்தல், அழகுக்குக் காரணமாகித் தலைவனின் உள்ளத்தைப் பிணைத்து, கவிஞர்களின் கற்பனைக்குத் தளம் அமைத்துத் தந்திருக்கிறது. சங்ககாலத்து இறையனார் முதல் இக்காலப் புதுக்கவிதையாளர்கள் வரை பலர் மகளிர் கூந்தலைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளனர். இக்கூந்தல் சமுதாய வாழ்வில் பண்பாட்டு விளக்கமாகவும் அமைந்துள்ளது. சங்க காலத்தில் சமுதாய வழக்கில் நிலவிய மரபு இலக்கியங்களிலும் இடம் பெற்றது. இம்மரபைக் கம்பர் மாறாது பின்பற்றித் தம் காப்பியத்தில் தகுந்த இடத்தில் நுணுக்கமாக ஆண்டுள்ளமையை இக்கட்டுரையில் காணலாம்.*

தலைவியின் கூந்தல் தலைவனுக்கே உரியது. அதனால், அவன் 'கூந்தற் கிழவன்' என்றே குறிக்கப்பட்டான். களவு வழிவாராக் கற்பிலும் தலைவன் அவ்வாறே குறிக்கப்படுகிறான். பாரி இறந்தபின் அவன் மகளிருக்குத் தக்க தலைவனைத் தேடும் கபிலரும் அவனைக் கூந்தற் கிழவன் என்றே குறிக்கிறார் (புறம்43).

தலைவனோடு கூடி வாழும் தலைவி கூந்தலைப் பேணிக் கொள்ளுகிறாள், அவனைப் பிரிந்த காலத்து நெய் பூசப் பெறாது, கோலம் கொள்ளாது வாடுகிறது அவள் கூந்தல். அவனோடு உறையும் காலத்து நறுநெய் பூசி, மணநீராடி மண்ணப் பெறுகிறது. வையாவிக் கோப்பெரும் பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து நல்லூர்ப் பரத்தையோடு உறைந்த காலத்துக் கண்ணகியின் கோலம் பெருங்குன்றூர்க் கிழாரின் உள்ளத்தை வருத்துகிறது. நல்லூரில் பேகன் தரும் பரிசை மறுத்து,

***அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை***
***நெய்யோடு துறந்த மையிருங் கூந்தல்***
***மண்ணுறு மணியின் மாசற மண்ணிய***
***புதுமலர் கஞல வின்று பெயரின்***
***அதுமனெம் பரிசிலாவியர் கோவே (புறம் 147)***

எனக் கண்ணகியின் கூந்தல் அழகு பெற நீ அவளிடம் செல்வதே

எனக்களிக்கும் பரிசில் என வேண்டுகிறார். இளங்கோவடிகளும் கோவலனைப் பிரிந்த கண்ணகியை 'மையறுங் கூந்தல் நெய்யணி மறப்ப' என விதந்தோதுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

தலைவனுக்காக வளர்க்கப்பட்டது தலைவியின் கூந்தல். அக்கூந்தல் பள்ளியில் பாயல் கொண்ட தலைவன் இறந்தபின் அது என்னவாகிறது என்பதையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. புரவலன் இறப்பறியாது பரிசில் பெற வந்த தாயங்கண்ணனார் அவன் மனைவியின் கைம்மைக் கோலம் கண்டு துணுக்குறுகிறார். வளையல்கள் இன்றி வறிய கரங்களோடும், கண்ணீரோடும் அல்லியுணவை உண்கிறாள். முன்பு மலர்ப்பந்தல் போலக் காட்சியளித்த அவள் கூந்தல் இன்று களையப்பட்டிருப்பது கண்டு வருந்துகிறார். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது பகைவர் தம் மனைவியர் கைம்மைக் கோலத்தை,

> ***"ஒண்ணுதல் மகளிர் கைம்மை கூர***
> ***அவிர்றல் கடுக்கு மம்மென்***
> ***குறையிருங் கூந்தல் கொய்தல் கண்டே" (புறம் 25)"***

எனப் பாடுகிறார் கல்லாடனார்.

பழந்தமிழர் மகளிர் கூந்தலை மதித்தனர். அது பண்பாட்டின் விளக்கமாய் அமைந்தது. தலைவியின் கூந்தல் தலைவன் ஒருவனுக்கே உரிமையானது. அரசரது அரண்போலப் பாதுகாப்பு மிக்கது. தலைவனோடு உறைந்த பொழுது அது அழகு ஊட்டப்பட்டது. அவனைப் பிரிந்துவிடத்து மண்ணைப்பெறுவது இல்லை. அவன் இறந்தபின் அது முற்றிலும் களையப்பட்டது. இதுவே பழந்தமிழர் பின்பற்றிய மரபு.

நாடு துறந்து காடு வந்த சீதையைப் பற்றி எடுத்தவர் இருவர். ஒருவன் விராதன்; மற்றவன் இராவணன். முனிவர் வேடத்தில் வந்த இராவணன் சீதையைக் கூந்தலை ஒரு கையாலும் குறங்கினை ஒரு கையாலும் பற்றித் தூக்கியதாய் வால்மீகி கூற, கம்பர் பர்ணசாலையை நிலத்தோடு பெயர்த்தெடுத்ததாய்க் கூறியுள்ளார். பெண்ணின் கூந்தலை மாற்றான் தொடுவது தமிழ் மரபன்று என்பதால் இதை மாற்றினார் என்பதை அறியலாம்.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக்குறைந்த செலவில்
அறிமுகப்படுத்தும்

# மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக் குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்துகொள்ள அரிய வாய்ப்பு

## திட்டத்தின் சிறப்பு பரிசோதனை

1. தலைமுதல் கால்வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்த பரிசோதனை
   - ★ இரத்த வகை
   - ★ சர்க்கரை அளவு
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ.சி.ஜி.
   - ★ சீரம் கிரியேட்டினைகள்
   - ★ கொலஸ்ட்ரால் அளவு

### கூடுதல் பலன்கள்

- ★ இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
- ★ இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு பார்த்தல்
- ★ இலவசமாக இரண்டுமுறை தலைசிறந்த நிபுணர்கள் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)

# இத்தனையும் ரூ. 400/- செலவிலேயே

பெண்களுக்கு: பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ. 50 செலுத்த வேண்டும்.

தொடர்புக்கு

# மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

Only private Hospital in South Tamilnadu Approved by State Govt. for Govt. Employees (G.O. Ms. No. 4901/19/6/95)

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை - 625 107.
Ph : 536361 (8 Lines)

உயர்ந்த மருத்துவம் குறைந்த செலவில்

அன்பு அச்சகம், மதுரை - 1.